பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 12 2024 **SATURDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. இந்தியா – அமெரிக்கா இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 30 கோடியை கடந்துள்ளது என்று மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் கூறியுள்ளது.

4. மின்னணு சாதனங்களின் உற்பத்தி வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் 500 பில்லியன் டாலர் இலக்கை எட்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. ஹாக்கி இந்தியா லீக் போட்டி ரூர்கேலாவில் இன்று தொடங்குகிறது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**<<<<<<>>>>>>**

அரசு முறைப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், அந்நாட்டு தேசிய பாதுகாப்பு ஆலோசகராக பொறுப்பேற்கவுள்ள திரு மைக்கேல் **Waltz** -ஐ சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையில் சர்வதேச விவகாரங்களில் தற்போதைய சூழல் குறித்தும் பரஸ்பரம் தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொண்டதாகவும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 30 கோடியை கடந்துள்ளது என்று மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அரசின் பல்வேறு சமூக நலத்திட்டங்கள் சென்றடையும் வகையில் இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்துடன் இதுவரை 12 சமூக நலத்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை மூன்று கோடியே 89 லட்சம் காலி பணியிடங்கள் குறித்த தகவல்கள் பகிரப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

வாடகை வாகனங்களுக்கு மொபைல் செயலிகள் மூலம் மாறுபட்ட கட்டணங்கள் வசூலிப்பது தொடர்பான புகார்கள் குறித்து விசாரிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திற்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது

இதுதொடர்பாக, மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆன்ட்ராய்டு மற்றும் ஆப்பிள் மொபைல் போன் செயலிகள் வாயிலாக ஒரே விதமான பயணங்களுக்கு பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாக புகார் வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, விரிவான விசாரணை மேற்கொண்டு விரைவில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேபோன்று, உணவு விநியோக செயலிகள், ஆன்லைன் டிக்கெட் செயலிகள் உள்ளிட்ட பல்வேறு செயலிகளின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்யுமாறு நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நுகர்வோரிடமிருந்து சட்டத்திற்கு புறம்பாக கட்டணம் வசூல் செய்யப்படுவதை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்று திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக உண்மை கண்டறியும் குழுவை, தேசிய மகளிர் ஆணையம் அமைத்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டு உறுப்பினர்களை கொண்ட குழு, இச்சம்பவத்திற்கான சூழ்நிலை குறித்தும் குற்றம் சாட்டப்பட்டவர் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பாதிக்கப்பட்ட மாணவி மற்றும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் இக்குழு விசாரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் திருமதி மம்தா குமாரி, மகாராஷ்ட்ரா மாநில முன்னாள் காவல்துறை தலைமை இயக்குனர் திரு பிரவீன் தீக்ஷித் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இன்று காலை பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடல், **Nigambodh ghat** பகுதிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இதன் பின்னர், இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றன.

இதனைத் தெடர்ந்து, துப்பாக்கி குண்டுகள் முழங்க அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

<<<<<<>>>>>>

நாட்டின் மின்னணு துறையில் வரும் 2027-ஆம் ஆண்டிற்குள், ஒரு கோடியே 20 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஆய்வறிக்கையில், மின்னணு துறையில் 30 லட்சம் நேரடி வேலைவாய்ப்புகளும், 90 லட்சம் மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் மின்னணு தொழில்துறையில் 500 பில்லியன் டாலர் அளவிலான உற்பத்தி இலக்கை எட்டுவதற்கும் இது உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட மாவீரர் பொல்லானின் தியாகங்கள் போற்றுதலுக்குரியவை என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

மாவீரர் பொல்லான் பிறந்த தினத்தையொட்டி இன்று அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், ஆங்கிலேயருக்கு எதிரான போரில் தமிழகத்தின் காவிரிக்கரை, அரச்சலூர், ஓடாநிலை பகுதிகளில் தீரன் சின்னமலை தலைமையிலான படைப்பிரிவு வெற்றிபெற முக்கிய காரணமாக திகழ்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

படை வீரர்களுக்கான போர் முறையை வகுப்பதில் அவர் தனிச்சிறப்புடன் செயல்பட்டவர் என்று திரு எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் பால்கர் ரயில் நிலையத்தில் நேற்றிரவு நேரிட்ட விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த நிலையத்தில் தண்டவாளத்தை ரயில் பயணிகள் கடக்க முயன்றபோது எதிரே வந்த ஜெய்பூர் அதிவிரைவு ரயில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த இரண்டு பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

<<<<<<>>>>>>

கடல்சார் பாரம்பரியத்துக்கான உலகின் மையமாக குஜராத் மாநிலம் லோத்தல் துறைமுகம் உருவெடுக்கும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

இத்துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

பண்டைய சிந்து சமவெளி நாகரீகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த லோத்தல் துறைமுக நகரில் படகுத்துறை, நடைபாதை, அருங்காட்சியகம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

மெக்ஸிகோவில் நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர், 27 பேர் காயமடைந்தனர்.
**Perote - Xalata** நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பேருந்து லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் நாடுகளின் எல்லைப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் 19 பாகிஸ்தான் ராணுவ வீரர்களும், ஆப்கானிஸ்தான் நாட்டை சேர்ந்த பொதுமக்கள் 3 பேரும் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் ராணுவ நிலைகளை குறிவைத்து, ஆப்கானிஸ்தான் எல்லைப்படை வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அந்நாட்டு ராணுவ வீரர்கள் 19 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**'Dant-e- Patan '** பகுதியில் உள்ள பாகிஸ்தான் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த பொதுமக்கள் மூன்று பேர் உயிரிழந்ததாக அந்த தகவல் மேலும் கூறுகிறது.

<<<<<<>>>>>>

உத்தராகண்ட் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடும் பனிப்பொழிவு நிலவி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அம்மாநிலத்தில் உள்ள உத்தரகாசி, பகேஷ்வர், பித்ரோகார், சமோலி, நயினிடால், டெஹ்ராடூன் போன்ற பகுதிகளிலும், மலைச்சிகரங்களிலும் கடும் பனிப்பொழிவு நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அம்மாநிலத்தின் சமவெளி பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், வெப்பநிலை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>>

தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்த மழை காரணமாக, காற்றின் தரம் சற்று மேம்பட்டுள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இன்று பிற்பகலில் தில்லியில் நிலவும் காற்றின் தரக்குறியீடு 140-ஆக மேம்பட்டுள்ளது என்று அந்த வாரியம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

உலக செஸ் சாம்பியன் குகேஷ், இளம் வயதில் பட்டம் வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள பிரதமர், கடந்த சில ஆண்டுகளாக அவருடன் கலந்துரையாடி வருவதாகவும், செஸ் விளையாட்டில் அவரது மன உறுதி மற்றும் அர்ப்பணிப்பு பிரமிக்கத்தக்கதாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இளம் வயதிலேயே செஸ் விளையாட்டில் உலக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைப்பேன் என்ற அவரது நம்பிக்கை தற்போது நனவாகியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

ஹாக்கி இந்தியா லீக் போட்டி இன்று ரூர்கேலாவில் தொடங்குகிறது.

இரவு மணி 8.15-க்கு தொடங்கவுள்ள முதல் போட்டியில் தில்லி அணி - **Gonasika** அணியை எதிர்கொள்கிறது.

இரண்டு கட்டங்களாக நடைபெறும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் அடுத்த மாதம் 31ஆம் தேதி நடைபெறும்.

இறுதிப்போட்டி பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி நடைபெறும்.

----------

அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnav Adkar- Pooja Ingale** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-3, 2-6, 12-10 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Honoka – Anri Nagata** இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரவிலும் இந்தியாவின் **Vaishnavi Adkar** பட்டம் வென்றார்.

--------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மூன்றாம் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 9 விக்கெட் இழப்பிற்கு 358 ரன் எடுத்துள்ளது.

மெல்போர்னில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் நிதிஷ்குமார் ரெட்டி அபாரமாக ஆடி 105 ரன்னுடனும், முஹமது சிராஜ் 2 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.